பல்வேறு துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் களிடமிருந்து பெறப்பட்டு, அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

சென்னை பூங்கா நகர் தொகுதிக்குக் குடிநீர்.

118—(*வினா எண். 491)—**திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) சென்னை பூங்கா நகர்த் தொகுதியில் பார்வதி கக்கன் காலனி பொதுமக்களுக்குக் குடிநீர் குழாய்த் துண்டிப்பால் நீண்ட காலமாக குடிதண்ணீர்ப் பிரச்சினை ஏற்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, (அ) சென்னை பூங்கா நகர் தொகுதியில் பார்வதி கக்கன் காலனி பகுதிக்கு கொடுக்கப்பட்டுள்ள குடிநீர் குழாய் இணைப்பு எந்தக காலத்திலும் துண்டிக்கப்படவில்லை. குடிநீர் விநியோகம் நிறுத்தப்படவில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திரு. அ. இரகுமான்கான்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பூங்கா நகர் தொகுதி புளியந்தோப்புப் பகுதி, பார்வதி காலனி, கக்கன் காலனி பகுதிகளில், அந்தப் பகுதியின் சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையில் நானே நேரில் சென்று பார்த் தேன். குடிநீர்க் குழாய்கள் துண்டிக்கப்பட்டு, மக்கள் தண்ணீர் பிரச்சினையால் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆனால் அரசுக்குத் தவறான தகவல் தரப்பட்டிருப்பதால், எது சரி யென்று தெரியவில்லை. ஆகவே கேள்வி எழவில்லை என்று சொல்கின்ற நிலை மாறி மாண்புமிகு அமைச்சர் அவர்களே நேரடியாக வந்து பார்த்து, அதைப் பரிசீலித்து ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். அது சீர் செய்யப் படுகின்ற வரைக்கும் 'ஆல்டர்னேடிவ் அரேஞ்மெண்ட்ஸ்' ஆக லாரிகளின் மூலமாகவும், டாங்குகளின் மூலமாகவும் தண்ணீர் வழங்குகின்ற ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, தற்போது இந்த பம்புகளில் ஏற்பட்டுள்ள சில பழுதுகளால் குடிசை மாற்று வாரியம் இரண்டு கைப்

1989 ஏப்ரல் 24]

பம்புகளை மக்கள் உபயோகத்திற்காக பொருத்தியுள்ளது. ஆகவே மேலும் உறுப்பினரவர்கள் இருக்கின்ற சில குறைபாடுகளை சுட்டிக்காட்டுவார் என்று சொன்னால், அதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு உடனடியாக முயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-50.)

திரு. அ. இரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக குடிசை மாற்று வாரிய அதிகாரிகளுக்கும், குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளுக்கும் விவரங்களை எழுதிக் கேட்டபோது இதை யார் செய்வது என்பதிலே இருவருக்கும் சர்ச்சை இருக்கிறது. எனவே 2 துறை அமைச்சர்களும் அல்லது அதிகாரிகளும் நேரில் சந்தித்து, நான் சொன்ன குறைகளைச் சரி செய்வதற்கு முன் வருவார்களா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குடிசை மாற்று வாரியத்தின் பம்புகளின் மூலம் மேல்நிலைத் தொட்டிகளுக்கு ஏற்றப்பட்டு காலனி மக்களுக்கு வினியோகம் செய்யப்படுகிறது. ஆகவே இதில் குடிசை மாற்று வாரியமும் குடிநீர்த் துறையும் சேர்ந்து பணிகளைச் செய்வதற்குத் தயாராக இருக்கின்றன. உடனடியாக அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் ஏற்பட்டிருக்கிற மிகக் கடுமையான, கொடுமையான குடிதண்ணீர் பஞ்சத்தைப்போக்குவதற்கு நிரந்தரமாக அரசு மேற்கொண்டிருக்கிற நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிரந்தர பரிகாரம் காணுவதற்காக கிருஷ்ணா தண்ணீரைப் பற்றிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. வறட்சி காலத்தில் இந்தப் பணிகளை மேற்கொள்வதற்காக பல்வேறு திட்டங்கள் அதிக செலவிலே உருவாக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக லாரிகளை வாடகைக்கு அமர்த்துவதன் தொகை அதிகரிக்கப்பட்டு 350 லட்சம் ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதே போல புதியதாக கையிறைப்பான்கள் அமைப்பதற்காக 82 லட்சம் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்த வறட்சி காலத்தில் உடனடியாக குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைக்கு அதிகமாக தொகை ஒதுக்கப்பட்டு பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நிரந்

கரமாக இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காக விரைவில் கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிரந்தரமாக கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் வருகிற வரையில் வீராணம் திட்டம் மிக நல்ல திட்டம் என்று அதிகாரிகளினாலேயும், தொழில் நுட்ப வல்லுநர்களாலேயும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலும், பாதி நிறைவேற்றப்பட்டிருந்ததால் அரசியல் நோக்கத்திற்காக அந்தத் திட்டம் இடையிலே கைவிடப்பட்டு, வேறு திட்டங்கள் தீட்டப்பட்டன முந்தைய அரசால். ஆகவே அந்தத் திட்டத்தையாவது இடைக்கால நிவாரணமாக நிறைவேற்றி சென்னை நகரத்தின குடிதண்ணீர் பஞ்சத்தை நீக்குவதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, வீராணம் திட்டம் ஒரு இடைக்காலத் திட்டமாக இருக்க முடியாது என்பதை உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள் எனக் கருதுகிறேன்.

திரு. செங்கைசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் நிரந்தரமாக ஒரு தீர்வு, இந்தச் சென்னைக்கு குடிதண்ணீர் பஞ்சத்தைப் போக்குவதற்காக துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி மொழியை அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சென்னையினுடைய ஓரப் பகுதியாக இருக்கக்கூடிய பெரம்பூர் தொகுதியில்தான் கடுமையான குடிநீர்ப் பஞ்சம் எப்போதும் ஏற்படுகிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் கொஞ்சம் கருணையை அதிகமாக பெரம்பூர் பகுதிக்குக் காட்டி, அதிகமான டாங்குகளையும், லாரிகளையும் கூடுதலாக செய்து தருவதற்கு ஏற்பாடு செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, நிலைமைகளை ஆய்ந்து அதற்கேற்ப ஏற்பாடுகள் செய்யப்படும.

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, வீராணம் திட்டம் நெருக்கடி காலத்தில் அநியாயமாக பழி சொல்லப்பட்டு கைவிடப்பட்ட திட்டம். அந்தத் திட்டத்திற்காக ஏராளமான பணம் செலவழித்து தயாரிக்கப்பட்ட குழாய்கள் மிக அருமையாக இன்றைக்கும் பாதுகாப்பாக இருக்கின்றன. ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் அந்தக் குழாய்களை சேகரித்து அதை இலாகா மூலம் பத்திரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1989 ஏப்ரல் 24]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குழாய்கள் மூலம் நெய்வேலியிலிருந்து வெளியிடப்படுகின்ற நீரினை தென்னாற்காடு மாவட்டம், பிற பகுதிகளுக்கும் கொண்டு செல்ல முடியுமா என்பதை எல்லாம் யோசிக்குமாறு துறைக்கு சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அந்தக் குழாய்களை பயன்படுத்துவதற்கான முயற்சிகளை இந்த அரசு உடனடியாக மேற்கொள்ளும் என்று உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குடிநீர் சம்பந்தமான கேள்வியாக இருப்பதால் சென்னையை விட்டு அடுத்து செல்வதற்கு கொஞ்சம் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் தாமிரபரணி ஆற்றிலிருந்து எங்கள் பகுதிக்கு கோவில்பட்டி, கழுகுமலை, எட்டயாபுரம் போன்ற இடங்களுக்கெல்லாம் தண்ணீர் வருகிறது. கடுமையான வறட்சியின் காரணமாக குடிநீர்த் தட்டுப்பாடு எல்லாக் கிராமங்களிலும் இருக்கிறது. லாரிகள் மூலமாவது சப்ளை செய்யுங்கள் என்று தந்தி வந்து கொண்டிருக்கிறது. ஆகவே இன்றைக்கு, எல்லா இடங்களிலும், தண்ணீர் சரியாக வருவதற்கு மின்சாரம் தடையாக இருக்கிறது. ஒரு நாளைக்கு 2 மணிநேரம் 3 மணி நேரம் மட்டும்தான் மின்சாரம் கிடைக்கிறது என்றும் திடீர் திடீர் என்று போய்விடுகிறது என்றும் சொல்லுகிறார்கள். 24 மணி நேரத்தில் 20 மணி நேரம் மின்சாரம் இல்லாமல் இருப்பதால் குடிதண்ணீர் வருகிற வழியில் பம்பிங் யூனிட் வேலை செய்யாமல் இருப்பதால் மிகுந்த தட்டுப்பாடு ஏற்படுகிறது. எனவே குடிதண்ணீர் வழங்கக்கூடிய முறையைத் திருத்தி ராணுவ நடவடிக்கை எடுத்து, மின்சாரத் தட்டுப்பாட்டை நீக்கியோ அல்லது லாரிகள் மூலமாகவோ வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தாமிரபரணியிலிருந்து கோவில்பட்டிக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் குடிதண்ணீர் கொண்டு வந்ததே கடந்த காலத்தில் இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் என்பதை திரு. அழகர்சாமி அவர்கள் அறிவார்கள். அப்பொழுதே இடையிலே உள்ள ஊர்களுக்கு எட்டையபுரம் போன்ற ஊர்களுக்கெல்லாம் இடையிடையே தண்ணீரை வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. தொடர்ந்து அது போல கிராமப் பகுதிகளுக்குத் தண்ணீரை வழங்குவதற்கு மின்சாரம் தடையாக இருப்பதாகச் சொன்னார்கள். கல்பாக்கம், நெய்வேலி முழுவதும் நம்முடைய கண்ட்ரோலில் இல்லை. அடிக்கடி அது கெட்டுப்போகிறது. அதனால்தான் மின்சாரம் தடை, என்ன காரணமோ அது புரியவில்லை.